செ.வெ.எண்: 604/2016 நாள்: 06.09.2016

# கன்னியாகுமரிமாவட்டத்தில் 2016 - 2017 ம் ஆண்டுபிரதமமந்திரிகிரிஷி சிஞ்சாயோ யோஜ்னா திட்டத்தின் மூலம் நுண்ணீர் பாசனம் அமைப்பதற்குரூ.47.7 லட்சம் நிதிஒதுக்கீடு

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க குறைந்த நீரில் அதிக பரப்பு சாகுபடி செய்திட உதவும் உன்னத திட்டமான நுண்ணீர் பாசன திட்டமானது தமிழக அரசால் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இயற்கை நீர் வளம் குறைந்து கொண்டே வரும் இந்த சூழலில் இத்திட்டத்தின் மூலம் 40 முதல் 60 சதவீதம் நீர் சேமிக்கப்படுகிறது.

பாரத நாட்டில் எந்தமாநிலங்களிலும் இல்லாதவகையில் தமிழகத்தில் மட்டும் சிறு/ குறு விவசாயிகளுக்கு (100 சதவீதமானியத்தில்) நுண்ணீர் பாசனஅமைப்புகள் எக்டர் ஒன்றுக்குஅதிகபட்சமாகரூ.1 இலட்சம் வரைவழங்கப்படுகிறது.

சிறு/ குறு விவசாயிகளுக்கு காய்கறி பயிர்களுக்கு 2.5 ஏக்கர் மற்றும் இதர பயிர்களுக்கு 5 ஏக்கர் வரை இலவசமாக நுண்ணீர் பாசனஅமைப்புகளை தங்கள் நிலங்களில் அமைத்துக் கொள்ளலாம். இதரவிவசாயிகளுக்கு 75 சதவீதமானியத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மத்தியஅரசு இத்திட்டத்தைசிறு/ குறு விவசாயிகளுக்கு 35 சதம் முதல் 45 சதம் வரை மட்டுமே மானியம் வழங்கியபோதிலும் தமிழக விவசாயிகளின் நலத்தை காக்கும் வகையில் தமிழக அரசால் 100 சதவீத மானியத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

நடப்புஆண்டில் தமிழ்நாட்டில் 46,099 எக்டர் பரப்பில் நுண்ணீர் பாசனம் அமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் பொது பிரிவு விவசாயிகளுக்கு ரூ.245.56 கோடி மானியம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி

விவசாயிகள் இத்திட்டத்தில் பங்கேற்க முன்னுரிமை வழங்கப்படுகிறது. இதற்காகரூ.69.26 கோடி நிதி தனியாக ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டமானது கன்னியாகுமரி மாவட்டத்தில் 173 ஏக்கர் பரப்பில் ரூ.47.70 இலட்சம் மானியத்தில் செயல்பட உள்ளது. முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

இத்திட்டத்தில் பங்கேற்க விரும்பும் விவசாயிகள் குடும்ப அட்டைநகல், கிராம அடங்கல், கணிணி சிட்டா, நிலவரைபடம், சிறு/ குறு விவசாயிகளாக இருப்பின் அதற்கான வட்டாட்சியரிடம் இருந்து பெறப்பட்ட சான்று ஆகிய ஆவணங்களுடன் அருகில் இருக்கும் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகி இத்திட்டத்தின் மூலம் பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. தோட்டக்கலை துணை இயக்குநர்,நாகர்கோவில் (அலைபேசிஎண் 9445450305).

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அளிக்கும் இந்த பொன்னான வாய்ப்பினை பயன் படுத்துமாறு அனைத்து விவசாயிகளும் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் தெரிவிக்கப்படுகிறது.

**மாவட்டஆட்சித் தலைவர்,**
**நாகர்கோவில்**

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.